பத்திரிக்கை செய்தி. வெ. எண் 27 நாள் 15.4.2012

தூத்துக்குடி மாவட்டம்.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் தொடக்கவிழா

தமிழ்நாடு முழுவதும் இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு சொட்டு மருந்து கொடுப்பதற்கான முகாம் இரண்டாவது சுற்று இன்று (15.04.2012) நடைபெறுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இம்முகாமை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி. அமிர்த ஜோதி அவர்கள் தலைமையில், [illegible] மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் அவர்கள் 15.04.2012 அன்று காலை 8.00 மணிக்கு தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்திற்கு உட்பட்ட தாளமுத்து நகரில் உள்ள சோனா திருமண மண்டபத்தில் வைத்து தொடங்கி வைத்தார்கள். பெற்றோர் திரளாக வந்திருந்து தங்களின் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்தனர்.

இன்று (15.04.2012) பிறந்த குழந்தைகள் முதல் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவசமாக போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட 1,50,000 (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்காக மாவட்டம் முழுவதும் 1104 சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. துணை சுகாதார நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனை, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, தனியார் மருத்துவமனை, பள்ளிக்கூடம், சத்துணவு மையங்கள், சமுதாய நலக்கூடம் ஆகியவற்றில் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் கூடும் இடமாகிய பஸ் ஸ்டாண்ட், இரயில்வே ஸ்டேஷன், திருச்செந்தூர் கோவில் ஆகிய இடங்களில் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு இதற்குமுன் எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும் இன்று (15.04.2012) போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும். சிறு வியாதிகளான காய்ச்சல், சளி, இருமல், வயிற்றுப்போக்கு இருந்தாலும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கலாம். எக்காரணம் கொண்டும் போலியோ சொட்டு மருந்து கொடுக்காமல் இருக்கக் கூடாது. போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ கிருமிகள் பரவுவதை தடுத்து போலியோ நோய் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தூத்துக்குடி.